www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.



# தொழிலாளர் பாதை

விலை 2.00

★ மாதமிரு இதழ் ★ இதழ் 381 ★ 1988 ஏப்ரல் 1 வெள்ளிக்கிழமை

★ இந்திய — இலங்கை படைகளே வடக்கு கிழக்கில் இருந்து வாபஸ் பெறு!
★ முதலாளித்துவ மக்கள் முன்னணியின் தொழிலாளர் கட்சித் தலைமையை அதிலிருந்தும் வெளியேறும் படி நிர்ப்பந்தம் செய்!
★ யூ. என். பி. அரசாங்கத்தை தோற்கடி!
★ தொழிலாள — விவசாய அரசாங்கத்திற்காகப் போராடு!

## பகிரங்கக் கூட்டம்

கொழும்பு புதிய நகர மண்டபம்
ஏப்ரல் மாதம் 19 ம் திகதி மாலை 5.00 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

# மாகாணசபை தேர்தலை நிராகரி!

### பு. க. க. அரசியல் குழுவின் அறிக்கை 29 – 3 – 1988

**தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை இரத்தத்தில் மூழ்கடிக்கும் முகமாக இலங்கையினதும், இந்தியாவினதும் ஏகாதிபத்திய அடிவருடிகளான பிற்போக்கு ஆட்சியாளர்கள் கைச்சாத்திட்ட ஜயவர்தன — காந்தி ஒப்பந்தத்தின் கீழ் நடாத்தப்படும் மாகாணசபை தேர்தலை நிராகரிக்கும் படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சிங்கள — தமிழ் தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்படும் மக்களிடமும் வேண்டுகின்றது.**

மாகாண சபைகளானது இந்திய இராணுவ ஆக்கிரமிப்புடன் கைகோர்த்த தமிழ் தேசியத்தை ஒடுக்கும் வகுப்புவாத மோதல்களை தூண்டி விடும் ஸ்தாபனங்களானதால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

மாகாண சபைகள் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குகின்றது என்று கூறும் தொழிலாள வர்க்கத்தின் துரோக தலைமைகளான சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ — இ தொ. கா. தலைமைகளுக்கு புறம்பாக இத்தேர்தல், இலங்கை — இந்திய இராணுவங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்லும் இராணுவ ஆட்சிக்கான அனுமதியை பெறும் முகமாக நடாத்தப்படும்.

இக்கசப்பான உண்மையை மூடி மறைப்பதற்காக சமசமாஜ தலைமைகள் எடுத்துரைக்கும் முழுப் பொய்யை பார்க்கவும். இந்திய — இலங்கை ஒப்பந்தம் சம்பந்தமாக சமசமாஜக் கட்சியின் உத்தியோக பூர்வமான அறிக்கை கீழ் கண்டவாறு குறிப்பிடுகின்றது:

''தற்போதைய காலத்தில் இந்நாட்டு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய ஒரு பிரச்சினையானது, நிரந்தரமாக அவசரகால சட்டத்தின் கீழ் வாழ்வதில் இருந்து மீழ்வதே. இன்னுமொரு பிரச்சினையானது வெளிநாட்டு இராணுவங்கள் இந்நாட்டில் இருப்பதற்கு முடிவு காண்பது எமது நாட்டை மீண்டும் ஜனநாயகமாக்குவதற்கும், வெளிநாட்டு இராணுவங்களை அகற்றுவதற்கும் நாம் பின்பற்ற வேண்டிய பாதை இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் அடங்கி உள்ளது. நாட்டின் எல்லா பகுதிகளிலும் மாகாண சபைகள் நிறுவுவது அப்பாதையாகும். (சமசமாஜ — 1987 நவம்பர்) இப்புழுகு இப்பொழுது வெடித்து அம்பலமாகியுள்ளது.

மாகாண சபை தேர்தல் நடாத்தப்படுவதும் மாகாண சபைகள் நிறுவப்படுவதும் இடம் பெறுவது நாடு அவசரகால சட்டத்திற்கு அடிபணியப்பட்டும், 150,000 க்கும் அதிகமான இந்திய துருப்புக்கள் மத்தியிலும் என்பது யாவருமறிவர். அவசரகால தடி தலையை குறிப்பார்க்கும் நிலையிலும், வட — கீழ் மாகாணங்கள் இந்திய இராணுவத்தினதும் தென்னிலங்கை பகுதி எஸ். டி. எவ், வினதும் குழப்படிருக்கும் நிலையிலும், சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ தலைமைகள் மக்கள் கட்சியுடன் ஒன்றிணைந்து யூ. என். பி யுடன் கும்பல் சேர்ந்து தேர்தலில் ஈடுபட்ட வண்ணம் மக்கள் மத்தியில் கொடிய நப்பாசையை விதைக்கின்றது என்பது இரகசியமல்ல.

1977 ல் ஆட்சிக்கு வந்த யூ. என் பி. அரசாங்கம் மக்கள் அனுபவித்த சிறிய ஜனநாயக உரிமைகளையும் பறிக்க தொடர்ச்சியாக இயங்கியது. 1978 ன் ஜனாதிபதி அரசியலமைப்பின் மூலம் அடிப்படை கொள்கைகள் நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்தில் இருந்து பறிக்கப்பட்டது. 'சிட் மந்திரி' அமைப்பின் மூலம் மக்கள் தெரிவு செய்யும் முறை விலக்கப்பட்டது. 1982 ல் நடத்த வேண்டி இருந்த பொது தேர்தல் கொள்ளைகார சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஒழிக்கப்பட்டது. ஆறுவது அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் தமிழ் இனத்தின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கிராம சபைகள், நகர சபைகள் 7.0 க்கு மேல் கலைக்கப்பட்டன: ''மக்களுக்கு

★ 2 ம் பக்கம் பார்க்கவும்



## தோழர். கீர்த்தி பாலசூரிய ஞாபகார்த்த நிதி

## ரூ. 2,50000

மார்ச் 31 ம் திகதி மாலை வரை நிதிக்கு ரூ: 1,24,450/= சேர்ந்துள்ளது. 2,50,000 ரூபாய் நிதியை பூரணப்படுத்தும் பொருட்டு உறுதி வழங்கிய நிதியுதவி தோழர்களிடம் இருந்தும் இன்னமும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. தங்கள் உறுதி மொழிகளை தவறாது நிறைவேற்றுவார்கள் என நாம் அதி உயர்ந்த எதிர்ப்பார்ப்புடன் உள்ளோம். இந்நிதியைப் பூரணப்படுத்துவது தோழர். லியொன் ட்ரொட்ஸ்கியினது நூல்களையும் அவரது கொள்கை கடைபிடித்த சிரேஷ்ட தோழரான கீர்த்தி பாலசூரியவின் நூல்களையும் தொழிலாளர் கைகளில் கிடைக்கச் செய்து தோழர். கீர்த்தியின் நிலைவான நினைப்பாக, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்புவதற்கு பெரும் சக்தியை வழங்குவதாகும்.

உங்கள் அதி உயர்ந்த நிதி உதவியை
பின்வரும் விலாசத்திற்கு அனுப்புக:

ஆனந்த வக்கும்புற
இல 90 — 1 வது மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு — 10

தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!

## ஞாபகார்த்தக் கூட்டம்

எட்டன் டிக்கோயா நகர மண்டபத்தில்

மே மாதம் 8 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு
கண்காட்சி ஆரம்பம் காலை 10.00 மணி முதல்

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# மாகாணசபை தேர்தலை நிராகரி!

[முன் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சி அதிகாரம் வழங்குவது'' சம்பந்தமாக யூ. என். பி. யின் உண்மையான கொள்கை இச்செயல்கள் மூலம் தெளிவாகியது. கண் முன்னில் நிருபிக்கப்படும் யூ. என். பி. யின் சர்வாதிகார வேலைத்திட்டத்தின் மூன், துரோக தலைமைகள மானக்கேடான முறையில் கூக்குரலிட்டு மாகாண சபைகள் மூலம் மக்களுக்கு அதிகாரம் கிடைக்கின்றதென கூறுகின்றனர்.

கண்டியில் நடந்த ஆறு சமசமாஜ தமாஷாவில் கலந்து கொண்ட கொல்வின் ஆர். டி. சில்வா இந்த கசப்பான பொய்யை இவ்வாறு எடுத்துரைத்தார். ''மாகாண சபைகள் மூலம் நாட்டினுள் எவ்வளவு பெரிய மாற்றம் உண்டாவது என்பதை மக்கள் புரிந்து கொள்வது அவசியம். அவைகள் இங்குத் தொடரும் எல்லா மாகாணங்களிலும் பரந்த ஷேத்திரத்தில் தன்னுடைய அலுவல்களை நிருவகிக்க முடியும். இதில் அடிப்படையான கோட்பாடு தானே தெரிவு செய்த பிரதிநிதிகள் மூலம் அம்மாகாணத்தின் பொது சுய நிருவாகமே ஆகும்.''

('டெயிலி நியுஸ்' — 1988 மார்ச் 17)

இதுவானது தமாஷாவில் உண்டு களித்த மயக்கத்தில் கூறியதொன்று அல்ல இதனால் விளக்கப்படுத்துவது என்னவென்றால் இத்துரோக தலைமைகள் முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனும், இராஜ்ஜியத்துடனும் எவ்வளவு தூரம் ஒன்றிணைந்து இருக்கின்றனர்கள் என்பதும், எதிரி வர்க்கத்தின் மேல் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள் என்பதுமே யாம் 1917 ல் இப்பால் யூ. என். பி. அரசாங்கம் செய்த எல்லாக் கருமங்களும் மக்களுக்கு எதிரானவையே என்னும் ஜொலிக்கும் உண்மைக்கு புறம்பாக எழுந்து நிற்கும சமசமாஜ — ஸ்டாலினிச தலைமைகள், தனது அடிவருடித் தனத்தை நியாயப்படுத்த ஒரு ''புதிய அரசியல் நீரோட்டம்'' ஆரம்பித்துள்ளது என பறை சாட்டுகின்றனர்.

இத்தலைமைகள் மீண்டும் மீண்டும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எடுத்துரைப்பது [illegible] இந்திய — [illegible] மூலம் [illegible] தன [illegible] மாறியுள்ளது என்பதே. இக்காரணம் சம்பந்தமாக இந்திய — இலங்கை ஒப்பந்தம் பற்றிய சமசமாஜ அறிக்கை கூறுவதை பார்ப்போம்.

''மேற் கூறியவைகளிலுள் ஒன்று தெளிவாகின்றது. அதாவது, யூ. என். பி. அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்த ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்த நடைமுறையை இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மாற்றிக் கொள்ள நேர்ந்திருக்கின்றது என்பது. அங்ஙனம் மாற நேர்ந்தது அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்த பிழையான வெளிநாட்டு கொள்கையினாலேயே ஆகும். உண்டுபடுத்தி உள்ள மாற்றம் எம் நாட்டுக்கு நற்பலன் தரும் அணிசேருத திசைக்கு திரும்பி உள்ளதே ஆகும்.

(சமசமாஜ — 1997 நம்பர்)

150,000 இந்திய துருப்புக்களின் ஆக்கிரமிப்பின் மூலம் நாட்டின் வட — கிழ் மாகாண தமிழ் இனமும் அவற்றின் பிறந்த மண்ணையும் சிறைப்படுத்த யூ. என். பி. தீட்டிய சதி இத்துரோகத் தலைமைகளுக்கு ''அணிசேரா திசைக்கு'' திரும்புவதாகும். பிற்போக்கு இந்திய ஆட்சியாளர்களின் ஏகாதிபத்திய விரோதம் என்னும் கந்தைத் துண்டாக ஒழிக்கப்பட்ட நிலையில் அதை வர்ணித்து இந்திய — இலங்கை ஒப்பந்தம் யூ. என். பி. யின் ஏகாதிபத்திய அடிவருடி பாதையை மாற்றியுள்ளது என கூறுகின்றார்கள். இவர்களின் ''புதிய அரசியல் நீரோட்டம்'' இதிலிருந்து ஆரம்பிக்கின்றது. இராணுவ ஆக்கிரமிப்பில் கட்டப்பட்ட மாகாண சபைகளினால் ''சுய நிர்வாகம்'' அளிக்கப்படுகின்றது என்பதும், ஏகாதிபத்தியத்தின் ஆசிர்வாதத்துடன் அதன் ஏஜந்தான இந்திய காங்கிரஸ் ஆட்சியாளருடன் யூ. என். பி. யின் கூட்டுச் சேர்வு ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' என்பதும் ஒரே விதமான புளுகாகும்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் 2 — 8 சரத்தின் கீழ் நாட்டப்படும் மாகாண சபைகள் [illegible] தமிழ் தேசியத்தினை நசுக்கும் இனவாத யுத்தத்தை [illegible] இந்திய இராணுவ [illegible] நியமிக்கப்பட்டுள்ள ஏற்பாடு [illegible] பின் [illegible]க்குவது என்பது, தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்தி, மிருகத்தனமான மோதல்களை சிருஷ்டித்து. அதற்கு மறைந்து முழு நாட்டையும் இராணுவ சர்வாதிகாரத்திற்கு அடிபணிய தீட்டிய மிலேச்சத்தனமான தட்டத்திற்கு இனங்குவதாகும்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முழுமையாக அழுகிப் போயுள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்கள இன்று செய்வது பூர்த்தி செய்யப்படாத ஜனநாயக பிரச்சினைகளை பூர்த்தி செய்வதல்ல. அதே பிரச்சினைகளை உபயோகித்து தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்தி கலக்க வேலை செய்வதே. இதற்கு இந்தியா ஒரு நல்ல உதாரணம். அது தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கி அமைக்கப்பட்ட இந்து பேரினவாத அரசினால் பல்வேறு தேசியங்களை வெட்டி பிரித்து அமைக்கப்பட்டுள்ள மாகாணங்கள் வகுப்புவாத, மதவாத நஞ்சுக் கிடங்குகளாக மாற்றப்பட்டு உள்ளது இலங்கையில் நாட்டப்படும் மாகாண சபைகள் இதற்கு அப்பால் எடுத்து சென்று பிராந்தியவாதம், ஜாதிபேதம் போன்றவைகளை கிளறும் நிறுவனங்களாக பிற்போக்கு முதலாளித்துவம் உபயோகிப்பது நிச்சயம் தொழிலாள வர்க்கத்தின் துரோக தலைமைகள் ''சுயாட்சி'' என பொய் கூறி தொழிலாளரை தள்ளப் போவது இவ்விதமான ஓர் நஞ்சுக் கிடங்கிலேயே ஆகும்.

துரோக சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ — இ. தொ. கா தலைமைகள் விதைக்கும் கொடிய நப்பாசைகளை புறக்கணித்து தொழிலாள வர்க்கம் இந்திய — இலங்கை துருப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் இனத்திற்கு எதிராக எடுத்துச் செல்லும் யுத்தத்தை நிறுத்தவும் யுத்தத்தை மூடி மறைக்கும் ஆடையான மாகாண சபைகளை நிராகரிக்கவும் முன்வர வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்திற்காக மிலேச்சகரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள விடுதலை முன்னணியும மாகாண சபைகளை புறக்கணிக்கின்றனர்கள் என்பதை முடி தொழிலாளர்களின புரட்சிகர புறக்கணிப்பு நிலைப்பாட்டை குழப்பியடிக்க இத்துரோக தலைமைகள் எத்தனிப்பார்கள். அவர்கள் கூறுவதிலேயே அதற்கு பதிலும் உண்டு. சிறீலங்கா சுதந்திரக் கட்சி — மக்கள விடுதலை முன்னணியின் மாகாணசபை நிராகரித்தலும், இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கான எதிர்ப்பும், சிங்கள இனவாத பாராளுமன்ற அமைப்பின் கீழ் சிங்கள முதலாளித்துவ இராணுவத்தை உபயோகித்து தமிழ் தேசியத்தை நசுக்கும் கொள்கையின் கீழ் கட்டி எழுப்பப்பட்டவை. யூ என். பி. யும், மக்கள் முன்னணி தலைமைகளும் அவர்களுடைய பந்தக்காரர்களான பத்தியவாதிகளும் சொல்வதென்ன வென்றால் சிங்கள இராணுவத்திற்கு தனியாக செய்ய முடியாத தமிழ் இன ஒடுக்குதலை இந்திய இராணுவத்தைவிட்டு செய்ய நேர்ந்திருக்கின்றது என்பதே. இந்த இரு கோஷ்டிகளும் இனவாத கொலைகளின் பிரேதங்களை கணிக்கும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். தொழிலாள வர்க்கம் இத்துரோகிகளுக்கு எதிராக, தமிழ் இனத்திற்கு எதிரான இந்திய இலங்கை யுத்தத்தை நிறுத்தவும், தமிழ் பக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் தமிழ் — சிங்கள தொழிலாள வர்க்கத்தின் ஒன்றுமையை நிறுவி முதலாளித்துவ அரசை வீழ்த்தி தொழிலாளர் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்வர வேண்டும்.

1948 ல் நாட்டப்பட்ட இலங்கை முதலாளித்துவ அரசின் 40 வருடகால வரலாற்றில் பூர்த்தி செய்யப்படாத தேசிய இனப் பிரச்சினையோ விவசாய பிரச்சினையோ, ஜனநாயக ரீதியில் தீர்க்க முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு முடியாதென திட்டவட்டமாக நிருபிதகப்பட்டுள்ளது. இநத 40 வருடகாலமும் சிங்கள — தமிழ் முதலாளிகள் ஏகாதிபத்தியத்துடன் நாள்தோறும் நெருங்கியதும், சிங்கள தமிழ் தொழிலாளர்களை பிளவு படுத்தி முதலாளித்துவ ஆட்சியை பேணும் இனவாத கொள்கை மீண்டும் மீண்டும் விஷம் ஏற்றப்பட்டதுமாக உள்ளது. சமசமாஜ — ஸ்டாலினிச — இ. தொ. கா. தலைமைகள் ஏகாதிபத்தியத்தின் பந்தக்காரர்களான யூ. என். பி. — சிறீலங்கா முதலாளிகளுடன் இணைந்ததன் மூலம் தொழிலாளரை வர்க்கப் போராட்டத்தில் இருந்து தடம் புரள செய்து. தனிநாடு கோரி தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இனத்தை குதிக்க செய்தது. யூ என். பி. அரசாங்கப் தனது போலி சுயாதீனத்தை தூக்கி எறிந்து ஏகாதிபத்தியவாதிகளின் ஆலோசனையின் மேல் இந்திய துருப்புக்களை வரவேற்றது தமிழ் இனத்தின் போராட்டத்தை இலங்கை முதலாளித்துவ இராணுவத்தினல் மற்றும் ஒடுக்க முடியாதமையாலாகும்.

இந்திய ஆக்கிரமிப்பிற்கும் தமிழ் விரோத யுத்தத்திற்கும் சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ — இ. தொ. கா, தலைமைகளின் ஆதரவை பெற்றுக கொண்டு சிங்கள — தமிழ — முஸ்லிம் மக்கள் மகதியில் மோதலை உண்டு படுத்தி இநதிய — இலங்கை இராணுவ ஆட்சிக்கு நாட்டை பலிப்பட யூ. என். பி. பிற்போக்குவாதிகள் முனைகின்றனர். மாகாண சபை தேர்தலை, தொழிலாளர்களுக்கு எதிராக பிற்போக்கு கிராமிய குட்டி முதலாளித்துவத்தை தூண்டி விடும் முகமாக இனவாத கொலைகார கொள்கையின் பின் திரள வைக்க உபயோகிக்கப் படுகின்றது மிகவும் பின் தங்கிய ஆறு மாகாணங்களில் தேர்தலை நடாத்துவது அதனால் கிடைக்கும் எந்தவொரு உந்துதலையும் உபயோகித்து தொழிலாள வர்க்கத்தின் பிற்போக்கு பிரிவுகளையும் தமிழ் விடுதலைப் போராட்டத்தை காட்டி கொடுத்து உள்ள புளொட், ஈ. பி. ஆர் எல். எப். போன்ற இயக்கங்களையும் பயன்படுத்தி தமிழ் இனத்தை ஒப்பந்தத்திற்கு அடிபணிய வைக்கவே ஆகும். தமிழ் ஈழத்திற்காக உறுதியான நிலைப்பாடு எடுத்து, தற்போது அதிலிருந்து பின்வாங்கிய வண்ணம் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் மேல் பேரம் பேச தள்ளப்பட்டுள்ள விடுதலைப் புலிகளையும் விடுதலைப் போராட்டத்தில் இருந்து பின் வாங்க வைக்க இதனை உபயோகிக்க முடியும் என இந்திய இலங்கை முதலாளித்துவங்கள் கணிக்கின்றன. தேசியவாதத்தினுள் இறுகி, முதலாளித்துவங்களின் மத்தியில் நடத்தும் சூழ்ச்சிகளின் மூலம் தேசிய விடுதலையை அடைய முடியுமென நினைக்கும் குட்டி முதலாளித்துவ தலைமைகள் ஆட்சியாளரின் பொறிகளில் வீழ்வதும், அதற்கு எதிராக பூரண ஜனநாயக ரீதியான கொள்கைகளை கடைபிடிக்க முடியாது வங்குரோத்து அடைந்து, பிற்போக்குவாதத்தினை ஆத்திர மூட்டலும் இனபேதவாத வேலைகளிலும் கைப்பொம்மையாவது தவிர்க்க முடியாது இதுவானது, பாரிய இராணுவ ஒடுக்குமுறை மத்தியிலும் தனது ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் ஆயிரக்கணக்கான தமிழ் தொழிலாள — விவசாய மக்களின் வெற்றிக்கு இடையூறாக உள்ளது.

இந்நிலைமைகள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் அதன் ஊடாக வரும் இராணுவ ஒடுக்குமுறைக்கும் மக்களை கட்டி விட நாட்டப்படும் மாகாணசபைகளை நிராகரித்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பேணி, சிங்கள — தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு தோழமையுடன் வாழக் கூடிய சிறீலங்கா — ஈழம் குடியரசை கட்டியெழுப்ப சிங்கள — தமிழ் தொழிலாளர் விவசாயிகள் முன்வர வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அறை கூவுகின்றது.

● 10 ம் பக்கம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com



# மாகாணசபை தேர்தலை நிராகரி!

★ 2ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து அகற்றுவதற்காக இந்திய தொழிலாளரை சுயாதீனமாக அணி திரட்டல் இதுவோடு ஒன்றாக பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இந்திய சி. பீ. ஐ — சி. பீ. எம். ஸ்டாலினிசக் கட்சிகள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு வழங்கும் ஆதரவை நிறுத்துவதற்காக தொழிலாளரை அணி திரட்டி இத்தலைமைகளின் கீழ்த்தரத்தை அம்பலப்படுத்தவும் அதற்கு எதிரான புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பவும் இந்திய ட்ரொட்ஸ்கிச கட்சியான சோசலிஸ்ட் லேபர் லீக் முன்னெடுத்துச் செல்லும் போராட்டமானது இலங்கை சிங்கள — தமிழ் தொழிலாளர்கள் இனவாத முதலாளித்துவ அரசினை தகர்க்க எடுத்துச் செல்லும் போராட்டத்தை வலுப்படுத்துகின்றது. தொழிலாள வர்க்கத்தின் மாற்று வேலைத்திட்டத்தின் முழு சக்தியும் இவ் வர்க்கத்தின் சர்வதேசவாத வர்க்க நிலைப்பாட்டின் மேல் தங்கியுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து நடாத்திய சதியின் மூலம் 1948 ல் நிறுவப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக அரசு, இராணுவ தாக்குதல்களுக்கு வழிவகுத்து ஜனநாயகத்தையே நாசமாக்கும், இனங்கள் மத்தியில் மோதல்களை உண்டுபண்ணும் ஒரு அமைப்பாக இன்று வெகு தூரம் கடந்து உள்ளது. அதுவானது இச்சகாப்தத்தில் ஜனநாயகத்தினை தாக்க ரீதியான பயனமன்றி தற்செயலான ஒன்றல்ல. இலங்கை தொழிலாள வர்க்கம் பீ. எஸ். பீ. ஐ. யும் சமசமாஜ தலைமையின் கீழும் அன்று இவ்வரசை நிறுவுவதற்கு எதிர்ப்பு காட்டியது. இன்று வரலாற்று ரீதியாக நியாயப்படுத்தப்பட்டு உள்ளது. முதலாளித்துவ ஜனநாயகத்தை வேண்டியவாறு முதலாளித்துவ மக்கள் முன்னணியில் சேர்ந்து பிற்போக்கு அரசினை பேணியவாறு கூக்குரலிட்டு இத்தலைமையை மாற்ற முடியாது. இந்நிலையை மாற்றி தொழிலாளர் தமிழ் இன விவசாய மக்களின் ஜனநாயக உரிமைகளை பேண ஜனநாயகத்தின் எதிரியான முதலாளித்துவத்தை தகர்த்து சோசலிசத்தை நிலைநாட்டக் கூடிய தொழிலாள வர்க்கம் தனது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதே ஒரே வழி என்பது இன்று தெட்டத் தெளிவாக காண்பிக்கப்படுகின்றது.

இந்நிலைமையின் கீழ் தமிழ் இனத்தின் தேசிய பிரச்சினையையும், தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், விவசாயிகளின், வேலையற்றோரின் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக யூ. என். பி. யை வெளியேற்றி சோசலிச வேலைத்திட்டத்திற்கு தன்னை சமர்ப்பணம் செய்த தொழிலாளர் விவசாயிகளின் அரசாங்கத்தை ஆட்சி பீடத்திற்கு கொண்டுவர தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும். இம்முன்நோக்கை சம்மதிக்க மக்கள் முன்னணியில் இருந்து சமசமாஜ — கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ மற்றும் இ. தொ. கா. விலகி தொழிற் சங்கங்களின் மகாநாடொன்றை கூட்டும் படி தலைமைகளை நிர்பந்திக்க வேண்டும்.

தொழிலாளர் — விவசாய அரசாங்கத்தை கட்டி எழுப்ப சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை அணி திரட்ட வேலைத் தளங்களிலும் பிராந்தியங்களிலும் சோவியட்டுகளை அமைக்க வேண்டும். இந்திய இராணுவத்தினதும், விஷேட இராணுவ பிரிவுகளினதும் ஆயுதபாணிகளான காடையர்களினதும் குழப்பப்பட்ட மக்கள் இயக்கத்திற்கு தனது ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க முடியும்; தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் கட்டி எழுப்பப்படும் சோவியத்துக்களாலேயே ஆகும்.

முதலாளித்துவ சிறிலங்காவினதும் குட்டி முதலாளித்துவ ம. வி. முன்னணி — சமசமாஜ — கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ மக்கள் கட்சியின் மக்கள் முன்னணியினதும் பொது தேர்தல் கோஷம் நாடு முகம் கொடுத்துள்ள எந்தவொரு பிரச்சினையும் கணக்கில் எடுக்காத இந்திர ஜாலமாகும். அது மட்டும் அல்லாமல் பொது தேர்தல் ஒன்றை வேண்டுவது யூ. என். பி. — சிறிலங்கா அரசுகள் மூலம் ஜனநாயகத்தை அகற்ற கொணர்ந்த சகல ஒடுக்குமுறை சட்டங்களையும் ஒப்புக்கொண்டு செய்யும் ஒன்றாக உள்ளது. இவ்வொடுக்கும் சட்டங்களை அகற்றவும் ஜனநாயக உரிமைகளை பேணும் அரசியல் சட்டம் அமைக்கும் சபைகளை மக்களின் வாக்குமூலம் கட்டியெழுப்ப தொழிலாள வர்க்கம் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். இச்சபைகளை நிலைநாட்ட கூடியதும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க கூடியதுமான ஒரே பொரு அமைப்பானது தொழிலாளர் தலைமையின் கீழ் நிலைநாட்டப்பட்ட சோவியத்துகளின் மேல் அமைக்கப்படும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் மட்டுமே

அம்முறையான ஒரு அரசாங்கத்திற்காக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறி போராடும் படி சமசமாஜ — கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ மற்றும் இ. தொ. காவுக்கு நிர்ப்பந்திக்க வேண்டும் அதன் மூலம் இத்தலைமைகளின் பிற்போக்குத்தனத்தை தொழிலாளர் முன் அம்பலப்படுத்தி மாற்று புரட்சிகர தலைமையின் கீழ் மக்களை அணி திரட்டுவது கீழ் காட்டிய வேலைத்திட்டத்தை வெற்றிகான வழி வகுக்கும். அதற்காக சோர்வு காணாது போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே நிரந்தர கோட்பாட்டின் மேல் நின்று போராடும் அனைத்துலகவாத ட்ரொட்ஸ்கிச கட்சிக்கு வெளியே நின்று புரட்சிகர வசனங்களை பேசி தன்னும் சகல மத்தியவாதிகள் திரிபுவாதத்துடனும் ஸ்டாலினிசத்துடனும் ஒன்றிணைந்ததன் மூலம் இந்திய ஆக்கிரமிப்புக்கும் மக்கள் முன்னணிக்கும் தனது ஆதரவை முன் கூட்டியே காட்டியுள்ளனர். இம்முறையான மத்தியவாத விஷச் சூழல்களை தவிர்த்து மேற் காட்டிய வேலைத்திட்டத்திற்காக போராடுவதற்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேருமாறு சகல தொழிலாள போராளிகளை வேண்டுகின்றோம்.

★ மாகாணசபை தேர்தலை நிராகரி!

★ ஜனநாயக உரிமைகளை வார்ஜிதம் படுத்தும் அரசியல் திட்டமைப்பு சபைகளை கட்டி எழுப்பு!

★ இந்திய இராணுவத்தை தமிழ் மண்ணில் இருந்து துரத்து! தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பேணு!

★ இந்திய — இலங்கை ஒப்பந்தம் ஒழிக!

★ யூ. என். பி. யை வெளியேற்று!

★ சிறீலங்கா — ஈழம் சோசலிச குடியரசுக்கும் — சோசலிச வேலைத்திட்டத்திற்கும் சமர்பணம் செய்யப்பட்ட தொழிலாளர் — விவசாய அரசாங்கத்திற்கும் — மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறி போராட சமசமாஜ — கம்யூனிஸ்ட் — நவசமசமாஜ — இ. தொ. காவுக்கு வற்புறுத்து!

★ தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியை கட்டியெழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!


புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 10-10-1986

1,-DM

This pamphlet can be ordered from

Neue Arbeiterpresse
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Please pay DM 1,- plus DM 0,50 postage to account no. 2 11 85 – 431, Postgiroamt Essen



**Subscribe to Tholilalar Pathai**

Have it posted.
20 issues: DM 26,-

Write to:
Neue Arbeiterpresse
Alfredstr. 71
D-4300 Essen 1
West Germany

Ecrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Subscription payable to account no. 211 85-431, Postgiroamt Essen (effected at any post office)

Fund

In order to reprint and circulate Tholilalar Pathai regularly in Germany we need your financial support. Please send donations to Postgirokonto "Neue Arbeiterpresse", B. Rippert, Nr. 211 85-431 Postgiroamt Essen. Note " Tamil Paper"
All incoming money in excess of the printing costs will be used to support the RCL in Sri Lanka.


படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.




# தொழிலாளர் பாதை

விலை 1.50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 383 ★ 1988 மே 13 வெள்ளிக்கிழமை


அடுத்த இதழ் முதல் 12 பக்க 'கம்கறு மாவத்த'



'கம்கறு மாவத்த' பத்திரிகை ஜூன் மாதத்தில் வெளிவரும முதல் இதழ் 12 பக்கங்களை கொண்டதாக பிரசுரமாகும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழுவானது தொழிலாள வர்க்கத்திடம் மகிழ்வுடன் தெரிவிக்கின்றது. தமிழில் பிரசுரமாகும் 'தொழிலாளர் பாதை' பத்திரிகை சில மாதங்களில் 12 பக்கங்கள் கொண்டு பிரசுரமாக உள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைவர் ஒருவராயும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் விளங்கிய மறைந்த தோழர். கீர்த்தி பாலசூரியவின் பெயரில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அபிவிருத்தி செய்யும் 2,50,000 ரூபா கொண்ட நிதி திரட்டப்படுகையில், தொழிலாள வர்க்கத்திடமும் ஏனைய ஒடுக்கப்பட்டவர்களிடமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு வழங்கிய ஓர் உறுதி மொழி இங்ஙனம் நிறைவேற்றப் படுகின்றது.

பக்கங்களை இங்ஙனம் அதிகரிப்பது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இலங்கைக்குள் கட்டியெழுப்பும் போராட்டத்தின் பெரும் உயர்மட்ட அளவிலான தீர்மானமாகும். இவ்வாண்டில் தோழர். லியொன் ட்ரொட்ஸ்கி ரன்காம் அகிலத்தினை ஆரம்பித்து 50 ஆண்டுகளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அனைத்துலகக் குழுவின் கிளையாக நிறுவப்பட்டு 20 ஆண்டுகளும் பூர்த்தியுறுகின்றன. எமது அனைத்துலக இயக்கத்தின் 50 ம் ஆண்டிற்குள், நாம் உலக ஏகாதிபத்தியம் மீண்டும் பாரிய அளவில் நெருக்கடிக்குள் மூழ்கி முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் காலனித்துவ நாடுகளிலும் புரட்சிகர தொழிலாள வர்க்க எழுச்சிகளுக்கான சூழ்நிலையை உருவாக்கி உள்ள நிலைமையிலேயே காலடி எடுத்து வைத்துள்ளோம். எமது இயக்கத்தின் மூக்கிய பொறுப்பான தொழிலாள வர்க்க தலைமைத்துவத்தை தீர்க்கும் பொருட்டு முன்னெரு போதும் இல்லாதவாறு போராட்டம் ஒன்றால் நாம் முன் செல்ல வேண்டி உள்ளோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை தொலைத்து கட்ட முயன்ற பிரித்தானியாவின் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்த விட்டோடிகள் கும்பலுக்கு எதிரான, வெற்றிகரமான போராட்டத்தினால்

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

# வட - கீழ் மாகாணங்களில் இந்திய இராணுவ ஒடுக்கு முறை உக்கிரம்

**கடந்த சில தினங்களாக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வட மாகாணத்தில் இராணுவ தாக்குதல்களை மீண்டும் உக்கிரம் ஆக்கியுள்ளது. இந்திய இராணுவ தாக்குதலினால் அநேகர் கொல்லப்பட்டு உள்ளதோடு தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் சில பிரதேசங்களில் அடியோடு ஸ்தம்பித்துப் போயுள்ளது.**

இஸ்ரேலின் உள்ளும் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட மேற்குக் கரைப் பகுதியிலும் பாலஸ்தீன மக்களை நசுக்கும் பொருட்டு சியோனிஸ்டுகள் கையாளும் மிலேச்ச ஒடுக்குமுறை விதிமுறைகளை இந்தியப் படைகளும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கையாண்டு வருகின்றனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கத்தினர்களையும், ஆயுதங்களையும் தேடுவதாக கூறிக் கொண்டு வடமராட்சிப் பகுதியில் நாகர் கோவில், செம்பியன் பற்று, மருதன் கேணி தாழையடி, சுண்டிக்குளம் முதலியனவற்றை முற்றுகையிட்ட இந்தியப் படைகள் சித்திரவதை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஏப்ரல் 30 ம் திகதி இப்பிரதேசங்களில் அமுழுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் எந்தவொரு கணத்திலும் நீக்கப்படாமல் — 10 நாட்கள தொடர்ச்சியாக அமுலில் இருந்து வந்தது. உணவுத் தட்டுப் பாட்டால் கிராமவாசிகள் அளப்பரிய சிரமங்களுக்காளாகினர்.

இப்பிரதேசங்களில் தற்சமயம் வசிப்போர் ஏழை மீனவர்களே. இம் மீனவர்கள் மீன் பிடித்தோ அல்லது அன்றன்றுடைய நடவடிக்கைக்கோ கிராமங்களை விட்டு வெளியேறாத நிலை ஏற்பட்டுள்ளது. கடைகள், பாடசாலைகள் அலுவலகங்கள் அனைத்தும் அடைத்து மூடப்பட்டுள்ளன ஊரடங்குச் சட்டம் காரணமாக் தமது உத்தியோக கடமைகளின் பொருட்டு வீடுகளில் இருந்து புறப்பட்டோர் வீடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையின் கீழ் இந்தியப் படைகள் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளார்கள்.

★ 2 ம் பக்கம் பார்க்கவும்



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதின ஊர்வலம்

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# அபு ஜிகாத் படுகொலையை கண்டனம் செய்!

## (புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவரான அபு ஜிகாத் சியோனிச கொலைகார கும்பலால் படுகொலை செய்யப்பட்டதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கண்டனம் செய்கின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினரான நாம் அவரது குடும்ப அங்கத்தவருக்கும் பீ. எல். ஓ. வின் அவரது தோழருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவை பெற்ற இந்த குழப்பகரமான கொலையின் ஊடாக பலஸ்தீன மக்கள் சுயநிர்ணய உரிமைக்கான தமது போராட்டத்தின் மிக திடமான போராளி ஒருவரை இழந்துவிட்டனர். பீ. எல். ஓ. வினது பிரதான அமைப்பான அல் பாடாவின் ப்பின் அமைப்பாளராயும் இராணுவ கட்டளையிடும் அதிகாரியாகவும் செயற்பட்டு தனது முழு வாழ்வையும் இப்போராட்டத்துடன் பிணைத்திருந்தார்.

இந்த மிலேச்ச கொலையானது மீண்டும் ஒரு முறை கொலையாளிகளும் பயங்கரவாதத்தை பகிரங்கமாக ஆதரிக்கும் சியோனிஸ்டுகளும் மத்திய கிழக்கின் முக்கிய பயங்கரவாதிகளும் பவசா அபு ஜிகாத்தை கொலை செய்யும், தீர்மானத்தை இஸ்ரேலிய உள்நாட்டு மந்திரி சபை வாக்கெடுப்பின் ஊடாகவே முடிவெடுத்திருந்தனர்.

சியோனிஸ்டுகள் இக்கொலைக்காக பலஸ்தீனத்துள் தொழிலாளர், இளைஞர்கள் எழுச்சியுற்றதற்கு எதிர்வினைவாகவே அணி திரண்டுள்ளனர். கொலைகளும் வெளியேற்றுவதும் சுடுவதையும் கவனியாது மாதக் கணக்கில் இப்புரட்சிகர எழுச்சி அபிவிருத்தியுற்றது. அபு ஜிகாத் கொலை சியோனிசத்தின் பலத்தை அல்ல அதன் நெருக்கடியின் குளறுப் படியையும் பலஸ்தீன எதிர்ப்பினை அடக்க இயலாக்கையாலாத் தன்மையயும் வெளிப்படுத்துகின்றது. கொலையின் விளைவாக இந்த எதிர்ப்பு மேலும் அபிவிருத்தியுற்றுள்ளது. இடையறுது சுடும் சியோனிச படைகளுக்கு எதிராக பலஸ்தீனத்துள் பாரிய போராட்டம் இதன் பின் அபிவிருத்தியுறுகின்றது.

இக்கொலையானது 30 க்கு மேற்பட்ட மொசாட் இராணுவ கொலைப் பிரிவினால் நடத்தப்பட்டு உள்ளது. 70 — 100 க்கு இடைப்பட்ட குண்டுகள் வரை அவரை தாக்கி உள்ளதுடன் கொலை கும்பலின் பெண் ஒருத்தி முழு சம்பவத்தையும் திரைப்படம் எடுத்துள்ளார். இஸ்ரேலிய விமானத்தினூடாக டியூனிசியாவின் ரேடியோ டெலிபோன் தற்காலிகமாக செயலற்று இருக்குமாறு செய்யப்பட்டது. பிரபல பயங்கரவாதிகளான யிஸ்டாக் ஷமீர் கொலைபடை திருப்பிச் செல்ல முன் மிக விமரிசையாக அவர்களுக்கு வரவேற்பளித்துள்ளான்.

இஸ்ரேயலைப் போல சகல ஏகாதிபத்திய பெருங் கைகளும் பலஸ்தீன மக்களின் எழுச்சியின் வீரத்தையும் திடசங்கற்பத்தையிட்டு பெரும் பயம் கொண்டுள்ளது. அது இஸ்ரேல் மட்டுமன்றி சகல முதலாளித்துவ அராபிய நாடுகளின் எழுச்சிக்கு வழிகோலி ஏகாதிபத்தியத்தை களையெடுக்கும் என்பதால் ஆகும்.

இத்தகைய கொலைக் குழுவில் தங்கியிருப்பது, ஆழமாகும் ஏகாதிபத்திய நெருக்கடிக்கும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சி அனைத்துலக ரீதியில் வெடித்தெழுவதற்கும் எதிராக ஏகாதிபத்தியம் செய்யும் தயாரிப்பாகும். சகல முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் பயங்கரவாதத்திற்கு எதிராக வார்த்தை அளவில் அறிக்கையிட்டு விட்டு இத்தகைய கொலைக் கும்பலையும் தயார் நிலையில் வைத்த வண்ணம் உள்ளன.

அபு ஜிகாத் பாலஸ்தீன தேசிய இயக்கத்தின் சிறந்த பிரதிநிதியாக விளங்கினார். கலீல் அல்வஷீர் என்ற பெயரில் பாலஸ்தீனத்துள் பிறந்த அவர் அடக்குமுறை யுத்தம் நாடு கடத்தல் என்பவற்றின் ஊடாக அபிவிருத்தியுற்று வந்த பரம்பரை ஒன்றின் பிரதிநிதியானார். 1948 ல் தனது தாயகத்தினை கைவிட்டோட நேர்ந்த அவர் 50 ம் ஆண்டு காலத்தில் நசாரின் அராபிய தேசிய வாதத்தினதும் அல்ஜீரிய தேசிய விடுதலை யுத்தத்தினதும் ஆசிகளை பெற்றார். அராபிய முதலாளித்துவ வர்க்கத்தின் காட்டிக் கொடுப்பிற்கு எதிராகிய அவர் 1954 ல் பாலஸ்தீன விடுதலையினை பொருட்டு ஆயுதம் தாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டமையால் எகிப்திய படைகளால் கைது செய்யப்பட்டார். 1956 ல் யசீர் அராபாத், அபு ஜிகாத்துடன் இணைந்து அல்பதா இயக்கத்தை ஆரம்பித்தார். 60 ம் ஆண்டுக் காலங்களில் இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை அரம்பித்ததும் அவரே. அதற்கு பாலஸ்தீன மக்களது ஏகோபித்த ஆதரவு கிடைத்ததை தொடர்ந்து அதற்கு எதிராக சதி செய்த அராபிய முதலாளித்துவ வாக்கம் அவரை ஜோர்டானுக்கும் பின்னர் லெபனானுக்கும் நாடு கடத்தியது.

அவர் சோசலிஸ்டோ அல்லது கம்யூனிஸ்டோ அன்று: பாலஸ்தீன தேசியவாதியே ஆவர். சுதந்திர பாலஸ்தீன அரசினை உருவாக்குவது அவரின் இலக்காக விளங்கியது. அவரது முதலாளித்துவ வேலைத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்த போதிலும் அவர் ஆயுத போராட்டத்திற்கு மக்களை அணி திரட்டவும் பீ. எல். ஓ. விற்குள் மிகவும் ஜனநாயக ரீதியிலான தொடர்புகளை வைத்திருக்கவும் செயற்பட்டார்.

இக்கொலை சம்பந்தமான அரசியல் பொறுப்பு ஏற்க வேண்டிய மற்றுமோர் எதிர்ப்புரட்சிகர ஏஜன்ட் அனைத்துலக ஸ்டாலினிசமாகும். 1947 ல் இஸ்ரேல் நிறுப்படுவதற்கு சார்பாக இருந்த ருஷ்ய அதிகாரத்துவத்தின் இன்றைய தலைவரான மிகையில் கொர்பச்சேவ் இக்கொலைக்கு சில தினங்களுக்கு முன் இஸ்ரேலை அங்கீகரிக்கும் படி யசீர் அரபாத்தை நிர்ப்பந்தித்தார். இஸ்ரேலுக்கு சார்பாக சோவியத் அதிகாரத்துவம் எடுத்த நிலைப்பாடு சியோனிஸ்டுகளது படுகொலைக் கொள்கையை அபிவிருத்தி செய்தது.

மார்க்கிசம், இஸ்ரேலிய அரசுக்கும் சியோனிசத்திற்கும் எந்தவித ஆதரவையும் வழங்காது. இஸ்ரேல் நிறுவப்பட்டதற்கும் யூத மக்களின் சுயநிர்ணயத்திற்கும் எந்தவித தொடர்புமே இடையாது. பாலஸ்தீன மக்களை விரட்டி அவர்களை இரண்டாம் தரக் குடிகளாக ஆக்கியே இஸ்ரேல் நிறுவப்பட்டது. சியோனிச அரசு இந்த அடிப்படையில் அமைந்து மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய யுத்த முகாம் ஒன்றை சிருஷ்டித்தது.

லியோன் ட்ரொட்ஸ்கி சியோனிசத்தை பற்றி அனைத்துலக தொழிலாள வர்க்கத்திற்கு தெளிவான எச்சரிக்கை விடுத்தார். யூதர் எதிர்ப்புக்கும் பாசிசத்துக்கும் எதிரான பதில், அராபிய நிலங்களை கைப்பற்றுவதே எனக் கூறி சியோனிசம் யூதர்களுக்கு மரண பொறிக்கிடங்கை தோண்டுவதாக ட்ரொட்ஸ்கி எச்சரித்தார்: 1948 ல் இஸ்ரேல் நிறுவப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன், நான்காம் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் பின்வருமாறு தெரிவித்தது. ''யூதர் பிரச்சினைக்கான சியோனிச தீர்வினை மிக அறியாமையானதும் பிற்போக்கானதென நான்காம் அகிலம் கண்டிக்கின்றது: சியோனிசத்தை முற்றாக நிராகரிப்பது யூத தொழிலாளரது போராட்டம் அராபிய ஏழைகளது சமூக, தேசிய, விடுதலை போராட்டத்துடன் இணைப்பதற்கான முன் நிபந்தனையாகும் என அது பிரகடனம் செய்கின்றது.

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள், அவர்களது அனைத்துலக எசமானர்களுக்கு ஏற்ப சென்று இஸ்ரேலிய அரசின் நீடிப்பினை அங்கீகரித்துள்ளனர்.

பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவு, உண்மையில் இலங்கைக்குள் ஏகாதிபத்தியத்தின் முக்கிய பாதுக்காப்பாளரான முதலாளித்துவ அரசினையும் முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க ஆட்சியையும் தூக்கி வீசி ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலமே கிடைக்கும். இதற்கு முதலாளித்துவ அரசின் பாதுகாப்பாளராகச் செயற்படும் சமசமாஜ, ஸ்டாலினிச, இ தொ. கா. தலைமைகளை தொழிலாள வர்க்க தலைமையில் இருந்து விரட்டியடிக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாக கட்டியெழுப்புவது அவசியம்.

# வட — கீழ் மாகாணங்களில் . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கிடங்குகளை தேடிக் கண்டு பிடிக்கும் வரை ஊரடங்குச் சட்டத்தை அகற்ப் போவதில்லை என இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஊரங்குச் சட்டத்தினால் மக்கள் சொல்லொணாத் துயரம் அடைவதால் அதனை அகற்றும் படி கேட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கு ''புலிகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அப்பொழுது ஊரடங்குச் சட்டத்தை அகற்றுகின்றோம்' என படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் இந்தியப் படைகளும் 'திரீஸ்டார்' கைக்கூலிப் படைகளும் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து கரவெட்டி, நெல்லியடி, வதிரி பருத்தித்துறை, வல்வெட்டித்துறையை சுற்றி வளைத்த இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் பிராந்திய இளைஞர்களை கைது செய்து, குறுக்கு விசாரணை செய்து, 'சாட்டை' அடி கொடுத்துள்ளனர். வீதித் தடைகளை தாண்டி' செல்லும் சகல இளைஞர்களும் இந்த மோசமான 'சாட்டை' அடிக்கு இலக்காகியுள்ளனர்.

துணுக்காய் பகுதியில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இரண்டு சைக்கிள் ஓட்டிகள் ஸ்தலத்திலேயே மரணமாகினர் யாழ்ப்பாணம் தொலைபேசி மத்திய நிலயத்தைச் சேர்ந்த ரீ. அம்பிகைராஜா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இந்திய இராணுவதினரால் தடுத்து வைககப்பட்டுள்ளார் அக்கரைப்பற்றினை சுற்றி வளைத்த இந்தியப் படைகள் விடுதலைப் புலிகள் இளைஞர்கள் எனச் சொல்லப்படும் சுக்கான், ரம்நாத் என்ற இரண்டு இளைஞர்களை சுட்டுக் கொன்றுள்ளது. மட்டக்களப்பு ஆரைப்பற்றினுள் ஆக்கிரமித்த இந்தியப் படைகள் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தினர் இருவரைக் கொலை செய்தும், அநேக இளைஞர்களைக் கைது செய்தும் உள்ளது.

திருமலைப் பகுதியில் தோப்பூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன், மணி என்ற இரண்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர் இந்தியப் படைகள் மே முதல் வாரத்தில் மட்டும் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தினர் எனச் சொல்லப்படும் 10 இளைஞர்கள் உட்பட 26 பேரை வட — கீழ் மாகாணங்களில் கைது செய்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் தினமும் இடம் பெறும் இந்த இராணுவ முற்றுகைகளின் போது தினமும் 10 வயது முதல் 50 வயது வரையிலான ஆண்கள் கைது செய்யப்படுகின்றனர். இவர்களை இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று கைகளைக் கட்டி பொல்லுகளால் தாக்கியுள்ளனர். இத்தாக்குதல்களுக்கு தமிழ் தெரியாத இந்தியப் படையினரே பயன்படுத்துகின்றனர்.

இதற்கிடையே மட்டக்களப்பு கரையோரப் பறமாக நங்கூரமிட்டுள்ள இந்திய

★ 6 ம் பக்கம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com





# வட — கீழ் மாகாணங்களில்

★ 2 ம் பக்கம் பார்க்கவும்

யுத்தக் கப்பல் பீரங்கி தாக்குதலை நடாத்தியுள்ளது இந்த பீரங்கி தாக்குதல்கள் இடைவிடாது நடைபெற்றன.

இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையேயான மோதுதல்களில் ஏநேக இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் மட்டக்களப்பில் கந்தல்காடு உப்பாறு பகுதியில் இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதுதலில் 1 விடுதலைப் புலி உறுப்பினரும் 1 இந்தியப் படையாளும் கொல்லப்பட்டனர். மே 12 ம் திகதி திருமலை — அனுராதபுரம் வீதியில் உள்ள வெலிவேரிக் குளம் பகுதியில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடிப்பினால் 6 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். வன்னிப் பகுதி மோதுதலில் ஒரு இந்தியப் படையாள் கொல்லப்பட்டும் புல்மோட்டை தாக்குதலில் இரண்டு இந்தியப் படையினர் காயம் அடைந்தனர். உரும்பிராயில் இடம் பெற்ற சிலிண்டர் வெடி குண்டில் அகப்பட்ட ஒரு இந்தியப் படையாள் கொல்லப்பட்டதோடு பெரும் பலர் காயமடைந்தனர்.

புளொட் இயக்கத்தின் வவுனியா அலுவலகம் மே 6 ம் திகதி இந்தியப் படைகளால் அழிக்கப்பட்டதோடு அதன் 15 அங்கத்தினர் கைது செய்யப்பட்டனர். தமக்கு எதிராக இந்தியப் படைகள் மேற் கொண்டுள்ள தாக்குதல்களையும் அங்கத்தினர்களை கைது செய்வதையும் நிறுத்தும் படி கோரி புளொட் இயக்கம் கடந்த 13 ம் — 14 ம் திகதிகளில் ஹர்த்தால் நடாத்தியது.

தமிழ் தேசிய இனத்தின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, பேரழிவு மிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இந்த இராணுவத்தைப் பராமரிக்கும் பொருட்டு (ஒரு நாளுக்கு 10 கோடி (இந்திய) ருபாய்) ஒதுக்கிய நிதிக்கு மேலதிகமாக 80 கோடி ருபாய்களைச் செலவிட்டுள்ளது.

இந்திய — இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் வட — கீழ் மாகாணங்களில் கட்டவிழ்த்து விட்டுள்ள இரத்தம் தோய்ந்த மிலேச்ச யுத்தத்துக்கு இலங்கை — சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. — நவசமசமாஜ மத்தியவாத தலைமைகள் அனைத்தினதும் பூரண ஆதரவு கிடைத்துள்ளது. இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறையின் பொருட்டு அந்நாட்டு ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்பும் அவர்களுக்கு கிடைத்து வருகின்றது.

இந்தப் படுகொலைகளை நடாத்தி வரும் வேளையில் இந்திய அரசாங்கம் தமது உளவுச் சேவை அதிகாரிகளைக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் செல்லையில் பேச்சுவார்த்தையும் நடாத்தி வருகின்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை அடியோடு துடைத்துக் கட்டும் அடிப்படையில் இடம்பெறும் இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகத்துக்கு அதிக அதிகாரம், குடியேற்றத் திட்டங்களை அகற்றல் ஆகிய கோரிக்கைகளை உடன் இந்திய ஆட்சியாளர்களுடன் பேரம்பேசி வருகின்றனர்.


## 'கம்கறு மாவத்த' . . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

அனைத்துலகக் குழு, மேற்கூறிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தயாரானது.

இலங்கையின் தீவிரமாகும் அரசியல் அபிவிருத்திகளுள் ஸ்டாலினிச சமசமாஜ துரோகிகள் மட்டுமல்ல, மாற்றுத் தலைமையை கட்டி எழுப்புவதாக கூறிக் கொள்ளும் மத்தியவாதிகளும் அம்பலமாக்கப்பட்டு உள்ளனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்ட போராடுகின்றது.

நாம் தொடுத்த நிதி உதவிக்கு இதுவரை நிதி வழங்கி அரசியல் போராட்டத்திற்கு ஒளியூட்டிய சகல தோழர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நிதியின் எஞ்சிய தொகையாக உள்ள 92,184 ஐ திரட்டி கொள்ள எமக்கு உதவுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல அங்கத்தவர்களிடமும் — 'தொழிலாளர் பாதை' — 'கம்கறு மாவத்த' வாசகர்களிடமும் தொழிலாள வர்க்க — ஒடுக்கப்பட்ட போராளிகளிடமும் நாம் வேண்டுகின்றோம். அது எமது மற்றய உறுதியுரையான தோழர். லியொன் ட்ரொட்ஸ்கி, தோழர். கீர்த்தி பாலசூரியவின் படைப்புக்களை பிரசுரிக்கவும் ஏனைய பிரசுரங்களை பிரசுரிக்கவும் எமக்கு உறுதுணையாயமையும்.


ஸ்ரீலங்காவின் நிலைமை பற்றியும்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்
அரசியற் கடமை பற்றியும்
நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக் குழுவின் அறிக்கை

Statement of the International Committee of the Fourth International on the Situation in Sri Lanka and the Political Tasks of the Revolutionary Communist League

November 19, 1987

DM 1.50

*This pamphlet can be ordered from:*
*neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West-Germany*

*or*

*Marxisme Révolutionnaire*
*B.P. 388*
*75626 Paris Cedex 13*
*France*

## ஹொலிவூட் தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்

தலவாக்கெல்ல ஹொலிவூட் தோட்டத்தின் தொழிலாளர்கள் கடந்த 4 ம் திகதி உடனடி வேலை நிறுத்தத்தில் குதித்தனர். சகல தொழிற் சங்கங்களினதும் தொழிலாளர்கள் இப்போராட்டத்தில் பங்கு பற்றினர்.

தோட்டத்தில் உப அதிகாரி ஒரு தொழிற்சங்க தலைவருக்கு எதிராக தாக்க முயன்றதை முன்னிட்டு இப்போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ்வதிகாரி இரு இளம் தொழிலாளர்களை சாப்பாட்டுக்குச் செல்ல விடாமல் வேலை வாங்கிய சம்பவம் பற்றி புகார் செய்ய சென்ற தலைவரைத் தாக்கி அவரை விரட்ட இவ்வதிகாரி முன் வந்தாராம் இச்சம்பவத்தை அறிந்த தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தி அதிகாரிக்கி எதிராக நடவடிக்கை எடுக்கும் படி கோரினர் அல்லாவிடில் போராட்டம் மற்றைய பகுதிகளுக்கும் எடுத்து செல்லப்படும் எனக் கூறினர்.

தொழிலாளர்களின் இந்த நிலைப்பாடு முன்னில் நிர்வாகம் சமாதானத்துக்கு முன் வந்ததும் போராட்டம் நிறுத்தப்பட்டது.

தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிராக இம் முறையான ஆத்திர மூட்டல்கள் சம்பந்தமாக தொழிலாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். தொண்டமான் தலைமை யூ. என். பி அரசுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கலை பயன்படுத்தியே தோட்ட நிர்வாகம் இம் முறையான தாக்குதல்களுக்கு முன்னெடுகின்றது. தொண்டமான் அரசுடன் நடத்தும் சமசரத்தை தகர்க்க தொழிலாளர் முன்வர வேண்டும் தன்னை பாதுகாப்பதற்கு ஒரே வழி அதுவே.

## வெளிவந்து விட்டது . . .

இலங்கை — இந்திய ஒப்பந்தமும்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்
(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்
அறிக்கை 1987 — நவம்பர் — 19)

விலை ரூ. 2 =

தொடர்பு கொள்க.

ஆனந்த வக்கும்புற
இல. 90, 1 ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் பஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்